## சுருக்கம்

பள்ளிக்கல்வி – மேல்நிலைக் கல்வி – மேல்நிலை முதலாம் ஆண்டு (+1)ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வி இணை மற்றும் புறச்செயல்பாடுகளை ஊக்குவித்தல் – மதிப்பீடு செய்ய வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளில், அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் வழங்குவது குறித்து – திருத்தம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (ஜிஇ.1)த் துறை**

அரசாணை (2டி) எண்.13 — நாள் : 20.02.2018.

திருவள்ளுவர் ஆண்டு , 2049
ஹேவிளம்பி வருடம், மாசி 8,
படிக்கப்பட்டவை :

1. அரசாணை (2டி) எண்.50, பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை, நாள். 09.08.2017.
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடிதம் ந.க.எண்.2592/D2/ 2017, நாள். 03.11.2017 மற்றும் 15.12.2017.

------

**ஆணை :–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017–2018–ம் ஆண்டிலிருந்து 11–ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்கான மதிப்பீட்டு முறை வடிவமைப்பு மற்றும் நெறிமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இதனையடுத்து, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் கடிதத்தில், 5 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரைப் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டுள்ள 33 செயல்பாடுகளுள், குறைந்தபட்சம் ஏதேனும் மூன்று செயல்பாடுகளில் பங்கேற்றுள்ளதை கருத்தில் கொண்டு அகமதிப்பீடு வழங்கலாம் எனத் தெரிவித்து கொண்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் வழங்குவது குறித்த நெறிமுறைகளில் சிற்சில திருத்தங்களை மேற்கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண். | கல்வி இணைச் செயல்பாடுகள் |
|---|---|
| 1. | மரம் வளர்த்தல் |
| 2. | இலக்கிய மன்றம் |
| 3. | கணித மன்றம் |
| 4. | இயற்பியல் மன்றம் |
| 5. | வேதியியல் மன்றம் |
| 6. | உயிரியல் மன்றம் |
| 7. | வணிகவியல் மன்றம் |
| 8. | பொருளியல் மன்றம் |

| | |
|---|---|
| 9. | வரலாற்று மன்றம் |
| 10. | அறிவியல் மன்றம் – அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட செயல்பாடுகள் |
| 11. | தேசிய பசுமைப் படை |
| 12. | சாரண சாரணியர் இயக்கம் |
| 13. | நாட்டு நலப் பணித் திட்டம் |
| 14. | தேசிய மாணவர் படை |
| 15. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் |
| 16. | சுற்றுச்சூழல் மன்றம் |
| 17. | நுண்கலை மன்றம் |
| 18. | முதலுதவி மன்றம் |
| 19. | உடல் நலன் மற்றும் சுகாதார மன்றம் |
| 20. | நுகர்வோர் மன்றம் |
| 21. | கலாச்சார மன்றம் |
| 22. | நாடக மன்றம் |
| 23. | தொன்மை பாதுகாப்பு மன்றம் |
| 24. | தகவல் தொழில் நுட்ப மன்றம் |
| 25. | நூலக மன்றம் |
| 26. | இதழியல் மன்றம் |
| 27. | இசை மன்றம் |
| 28. | கவின் கலை மன்றம் |
| 29. | செஞ்சுருள் சங்கம் |
| 30. | வினாடி வினா மன்றம் |
| 31. | சாலைப்பாதுகாப்புப் படை |
| 32. | விளையாட்டுச் செயல்பாடுகள் |
| 33. | தொழிற்கல்வி மன்றம் |

3. மேற்காணும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி 4 (V)(A)&(B)–க்கு பின்வருமாறு திருத்தம் வெளியிடலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

<u>திருத்தம்</u>

அரசாணை (2டி) எண்.50, பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை, நாள். 09.08.2017–ல், பத்தி 4(V)(A)&(B) –க்கு பதிலாக கீழ்க்கண்டவாறு திருத்தி வாசிக்கவும் :–

<u>பத்தி 4.(V) (A) அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்ஒதுக்கீடு (அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்) (தொழிற்கல்வி செய்முறை தவிர்த்து)</u>

(i). <u>மாணவர்கள் வருகைப்பதிவு</u> : <u>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்</u>

a. 80 சதவீதத்திற்கு மேல் வருகை : 2 மதிப்பெண்கள்
b. 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை : 1 மதிப்பெண்

(ii). உள்நிலைத் தேர்வுகள் : அதிகபட்சம் 4 மதிப்பெண்கள்
சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் – 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

(iii). ஒப்படைவு / செயல்திட்டம் /களப்பயணம் : அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்
(ஒப்படைவு / செயல்திட்டம் /களப்பயணம் இவை மூன்றில் ஏதேனும் ஒன்று – உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்)

(iv). கல்வி இணைச்செயல்பாடுகள் : அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்.
(முன்பக்கம் பத்தி 2–ல் காணும் கல்வி இணைச் செயல்பாடுகளுள் ஏதேனும் மூன்று)

(B) தொழிற்கல்வி செய்முறை பாடத்திற்கான அக மதிப்பீடு : (அதிகபட்சம் 25 மதிப்பெண்கள்)

(i). மாணவர்கள் வருகைப்பதிவு : அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்
a. 80 சதவீதத்திற்கு மேல் வருகை : 5 மதிப்பெண்கள்
b. 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை : 3 மதிப்பெண்கள்

(ii). உள்நிலைத் தேர்வுகள் : அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்
சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் – 10 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

(iii). ஒப்படைவு / செயல்திட்டம் /களப்பயணம் : அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்
(ஒப்படைவு / செயல்திட்டம் /களப்பயணம் இவை மூன்றில் ஏதேனும் ஒன்று – உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்)

(iv). கல்வி இணைச்செயல்பாடுகள் : அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்.
(முன்பக்கம் பத்தி 2–ல் காணும் கல்வி இணைச் செயல்பாடுகளுள் ஏதேனும் மூன்று)

4. தற்போது, 2017–2018–ஆம் கல்வியாண்டு நிறைவடையும் நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, மேற்கண்டுள்ள நடைமுறையினை 2018–2019–ஆம் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்துமாறு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் இயக்குநர், சென்னை–6.
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
இருப்புக் கோப்பு / கூடுதல் நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/2/18.
பிரிவு அலுவலர்.

**மேகு.எண். 040/கே/ இ1/ 2018 நாள்.23-02-2018**

தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

23.2.18